முருகப்பெருமான் துணை

**மகான் மௌனசித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.01.2023, வியாழக்கிழமை

1. கலியிடரை வெல்லும் கைலாயம்
   கந்தனோடு ஞானிகள் வாழும் சரணாலயம்
   அழியாமை தருகின்ற ஞானாலயம்
   அரங்கமகான் அருளும் பிரணவஆலயம்
2. பிரணவ ஆலயத்தை உலக மக்கள்
   பிடிப்பென பற்றித் தொடர்ந்துவர
   சரவணப்பெருமான் அருள் கண்டிடுவரென
   சாற்றியே அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை சுபகிருது சிலை திங்கள்
   அறிவிக்க எழுநான்கு திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 28 ம் நாள் 12.01.2023, வியாழக்கிழமை)
   ஆசிதனை மௌனசித்தர் யானும்
   அருளுவேன் உலகோர் உயர்வுபெற
4. உயர்வுதரும் சத்திய வழிகளாக
   உலகமாற்றம் வேண்டி அருளும்
   தயவே வடிவான அரங்கன் ஞானம்
   தருமமாக சன்மார்க்கமாக இணைந்துவர
5. வருகவே கலியுக மக்கள்
   வணங்கி ஏற்றுத் தொடர
   முருகப்பெருமான் வழிபாட்டை
   முழுமை அடையும் வண்ணமாக
6. ஆகவே உலகோர் கடைபிடிக்க
   அரங்க ஞானி வழி அனைவருக்கும்
   மகான்கள் ஆகும் உயர் வாய்ப்பு
   மண்ணுலகில் வரமாக வந்தடையும்
7. அடையவே இந்தவித மாற்றம்
   அகிலம் எங்கிலும் குருவருளாக
   தடையின்றி உலகோரிடை சித்திக்க
   தரணியில் ஞானவான்கள் படை மிகுந்து
8. மிகுந்து ஞானத் தலைமையும்
   மேலவர்கள் துணை பெருக
   தகுந்த ஞானிகள் ஆசிபட
   தரணியில் ஞான ஆட்சி பலம்
9. ஆட்சிபலம் கண்டடைய ஆசி
   ஆணவம் ஊழல் அநீதியெனும்
   வாட்டமான அஞ்ஞான ஆளுமை
   வதைகண்டு சடுதி முடிவு கண்டு

10. கண்டுமே நீதி தருமம் காத்து
கருணை தயவும் நிறைந்த
தொண்டுமிக்க ஞான ஆட்சியாக
தேசிகன் அவதார நோக்கமாக

11. ஆகவேஅனைத்தும் சடுதியில்
அரங்கேறி ஆறுமுகக் கடவுள்
செகத்தில் வெளிப்பட அற்புதம்நிகழும்
செப்பிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–